**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 156/2019**

**வா.சா.1 – மூர்த்தி**

**<u>10–07–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு தமிழ் எழுதப்படிக்கத்தெரியுமா என்றால் படிக்கமட்டும் ஒரு அளவுக்கு தெரியும். நான் திருப்பூர் மாநகராட்சியில் 20 வருடமாக துப்புரவு தொழிலாகராக பணிபுரிகிறேன். இடப்பிரச்சனைக்காக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். TS No. 235 ஐ கிரையம் வாங்கி 1ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் கிரையம் வாங்கி உள்ளார் எங்கு என்று தெரியாது. TS No. 236 க்கு எனது அம்மா 1ம் வாதி பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். TS No. 237 சின்னான் என்பவர் பெயரில் உள்ளது. தாவா சொத்து எந்த TS எண்ணில் உள்ளது என்றால் J 41ல் உள்ளது.

2. வழக்கில் குறிப்பிட்டுள்ள 234 TS எண் மாநகராட்சி தடம் என்றால் தடம்தான் எங்கள் இடத்தில் இருந்து தடத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. எங்கள் இடத்தில் இருந்துதான் தடத்திற்கு இடம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை வழக்கில் நான் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை, தற்போது தான் அந்த விபரம் தெரிந்தது. நான் சொல்வது பொய் என்றும் TS No. 234 அர்ஜுனகாலனிக்கு செல்வதற்கான தடம் என்றால் மூன்று வீட்டை சேர்ந்தவர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள்.

3. மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்துவிட்டு எங்கள் அனுபவ பாத்தியத்தில் உள்ளதாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. TS No. 234க்கு 209 என்று புதிதாக எண் வழங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. எனது இடத்தில் இருந்து தடம்

கொடுக்கப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் மாநகரடாட்சியில் இருந்து எனது அம்மாவிற்கு இலவச பட்டா வழங்கியுள்ளதால் இலவசமாக கொடுக்கப்பட்ட இடத்தை தடத்திற்கு கொடுக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல.

4. சிறிய இடத்தை தான் அரசாங்கம் இலவசமாக கொடுக்கும் என்றும் அதில் இருந்து நான் தடத்திற்காக கொடுத்தது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் இடம் கிழக்கோட்டில் உள்ளது என்றால் சரிதான். அதற்கு தென்வடல் தடத்தின் வழியாக சென்று வலதுபுறம் திரும்பி வந்தால்தான் 1ம் பிரதிவாதி இடத்திற்கு செல்லமுடியும் என்றால் சரியல்ல. அவரது இடத்தில் இருந்து நேராக சாலை செல்கிறது. அவரது வீட்டிற்கு பின்புறம் நான் தடம் இருப்பதாக சொல்லும் இடத்தில் பட்டத்தரசி அம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான். கோவிலில் இருந்து அவர்களுக்கு வேறு வழி உள்ளது.

5. அந்த தடத்தை அடைத்துவைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. TS No. 234 வழியாக வந்தால்தான் 1ம் பிரதிவாதி பூமிக்கு வரமுடியும் என்றால் சரிதான். ஆனால் எங்களை அவ்வாழியாக செல்வதை தடுக்கிறார்கள். மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தின் ஓரத்தில் தான் கழிவு நீர் கொண்டுசெல்ல இயலும் என்றும் அதற்கு நாங்கள் தடை செய்கிறோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் எதிர்வாதத்தை தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். நான் இதே நீதிமன்றத்தில் அ.வ. 343/2017 தாக்கல் செய்து அதனை தள்ளுபடிக்கு விட்டேன் என்றால் அதன் மீது உயர் நீதிமன்றம் சென்றுள்ளோம்.

6. தள்ளுபடி உத்தரவுக்கு எதிராக நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றும், நீதிப்பேராணை மனுவை தனியாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தாயார் தாக்கல் செய்த நீதிப்பேரணை

மனு தள்ளுபடியாகிவிட்டது என்றால் அவ்வாறு தான் சொன்னார்கள். அதில் மீண்டும் விசாரணை செய்யவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எந்தவித இடையூறு செய்யவில்லை என்றால் சரியல்ல. மின் இணைப்பு மாநகராட்சி தடம் வழியாக கொண்டு செல்ல முயற்சித்தபோது நான் பிரச்சினை செய்தேன் என்றால் சரியல்ல.

7. நான் அனுபவ பாத்தியமான 30 வருடமாக தாவா இடத்தில் உள்ளேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. அப்படி இருந்திருந்தால் பட்டா கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி உத்தரவு போடுவதற்கு முன்பு விசாரணை செய்து அளந்துபார்த்து என்னை அப்புறப்படுத்த முயற்சித்தார்கள் என்றும் அதனால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆங்கிரமிப்பை மொத்தமாக எடுக்க வந்தார்கள் என்றும் அதனை நான் தடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. மெயின் ரோட்டில் இருந்து காலனிக்கு சொல்லும் தடம் 5 1/2 அடி தான் இருக்கும், அதில் இருசக்கர வாகனம், மற்றும் ஆட்டோ செல்லும் என்றால் ஆட்டோ செல்லமுடியாது.

8. இவ்வாறு இருக்கும் குறுகலான தடத்தில் 234 ஐ நான் முழுவதும் ஆக்கிரமித்துள்ளதால் 1ம் பிரதிவாதி அவர் இடத்திற்கு செல்லமுடியவில்லை என்றால் சரியல்ல. நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்குமூலம் இன்றி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டதால் இவ்வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு

முழுமையாக பாத்தியப்படாததால் எனக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிகப்பட்டது. )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஓம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.